| | |
|---|---|
| **PG–101** | **MAT–11** |

# P.G. DEGREE EXAMINATION – DECEMBER, 2018

First Year

இக்கால இலக்கியம்

Time : 3 hours　　　　　Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

1. பாரதியாரின் சிறப்புப் பெயர்கள் யாவை?

2. பாரதிதாசன் சிறு குறிப்பு வரைக.

3. கவிமணியின் படைப்புகள் வழி அறியலாகும் உண்மைகள் யாவை?

4. மீராவின் படைப்புகளைப் பட்டியலிடுக.

5. அண்ணாவின் நடைநலன்களை விவரிக்க.

6. உ.வே.சா. பதிப்பித்த பழந்தமிழ் நூல்கள் யாவை?

7. சொல்லின் செல்வர் யார்? விளக்கம் தருக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக

8. பாரதியின் படைப்பாக்கங்களில் கண்ணன் பாட்டு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளதற்கான காரணங்களைக் கட்டுரைக்க.

9. பாரதிதாசனின் தமிழ் உணர்ச்சியினை அழகின் சிரிப்பு வழி கட்டுரை வரைக.

10. கவிமணியின் புலமைத் திறனை விளக்குக.

11. மீராவின் படைப்புகளில் வெளிப்படும் எள்ளல் சுவைகள் குறித்துக் கட்டுரை வரைக.

12. ஜெயகாந்தனின் பெண்பாத்திரப் படைப்புகள் குறித்து விளக்குக.

13. சாயாவனம் நாவலின் கதைக் களம் குறித்துக் கட்டுரை வரைக.

14. ‘ஆற்றங்கரையிலே’ படைப்பின் வழி அறியலாகும் நகரங்களின் அமைப்புகளை விளக்குக.

| PG-102 | MAT–12 |
|---|---|

# P.G. DEGREE EXAMINATION – DECEMBER, 2018

## First Year

இடைக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

1. நாவுக்கரசருக்கு வழங்கக் கூடிய சிறப்புப் பெயர்கள் யாவை?

2. காரைக்கால் அம்மையார் குறிப்பு வரைக.

3. மாணிக்கவாசகருக்கு வழங்கக் கூடிய சிறப்புப் பெயர்களைக் கூறுக.

4. பன்னிரு ஆழ்வார்கள் யார்? பெயர்களைச் சுட்டுக.

5. குற்றாலக் குறவஞ்சி யாரால் எதற்காகப் பாடப்பட்டது?

6. குமரகுருபரர் பாடிய நூல்கள் யாவை?

7. தாயுமானவர் பாடிய பாடலின் சிறப்பு யாது?

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் மூன்று பக்க அளவில் விடையளிக்கவும்.

8. திருநாவுக்கரசர் பாடல்களின் மூலம் வெளிப்படும் பக்திச் சுவைகளை விவரிக்க.

9. காரைக்கால் அம்மையார் இறைவனிடத்து வேண்டுவன யாவை?

10. மாணிக்கவாசகரின் பாடல்களில் உள்ள நாட்டுப்புறக் கூறுகள் குறித்து விளக்குக.

11. நம்மாழ்வார் கூறும் இறையின் இலக்கணம் யாது?

12. சிவவாக்கியர் பாடல்களின் மூலம் வெளிப்படும் இறை அனுபவங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

13. திரிகூடராசப்பக் கவிராயர் பாடலில் உள்ள மலைவள வருணனைகளை விவரி.

14. குணங்குடி மஸ்தான்சாகிபின் புலமைத் திறனை விளக்குக.

———————

| **PG–103** | **MAT–13** |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION — DECEMBER, 2018.

First Year

இலக்கணம் : தொல்காப்பியம் – எழுத்ததிகாரம்

Time : 3 hours — Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க.

1. மாத்திரை – தொல்காப்பிய வழி நின்று விளக்கி வரைக.

2. மொழிகள் மூவகைப்படுதல் – எடுத்துக் கூறுக.

3. சார்பெழுத்துகள் பிறக்குமாற்றை எழுத்ததிகார வழி நின்று கூறுக.

4. உடம்படுமெய் பற்றி எழுத்ததிகாரம் கூறுவதைக் குறிப்பிடுக.

5. எல்லாரும், எல்லீரும் என்பன உருபொடு புணர்தலை எடுத்துக்காட்டுக.

6. எண்ணுப்பெயர்கள் அன் சாரியைப் பெற்றுப் புணர்தலைக் கூறுக.

7. `அல்லது கிளப்பினும், வேற்றுமைக் கண்ணும்' என்று குற்றியலுகரப் புணரியல் குறிப்பிடுவது யாது?

பகுதி ஆ — ($5 \times 10 = 50$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வினாக்களில் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

8. நூன்மரபு உள்ளடக்கியுள்ள செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

9. பிறப்பியல் அதிகாரம் வழி அறியலாகும் செய்திகளை விரிவான அளவில் எடுத்துரைக்க.

10. இருபத்துநான்கு ஈற்றினும் விரிந்து முடிவனவற்றைத் தொகைமரபு இயல் வழி நின்று விளக்குக.

11. ஆகார ஈற்றுப் பெயர்கள் புணர்வதை உயிர்மயங்கியல் வழி நின்று விளக்கமாக எடுத்துக்காட்டுக.

12. புள்ளியீறு வன்கணத்தோடு மயங்கிப் புணருந்தன்மை குறித்து எழுத்ததிகாரம் பகரும் செய்திகளை எடுத்துக் காட்டுக.

13. குற்றியலுகர ஈறு வருமொழியோடு புணரும் இயல்பினைத் தொல்காப்பிய வழி நின்று எடுத்துரைக்க.

14. புணர்ச்சியில் சாரியை பெறும் இடத்தினைத் தொல்காப்பிய வழிநின்று விவரிக்க.

| PG–104 | MAT–14 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – DECEMBER 2018.

First Year

இலக்கணம் : தொல்காப்பியம் — சொல்லதிகாரம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க.

1. தகுதியும் வழக்கும் குறித்து விவரி.

2. மூன்றாம் வேற்றுமை – விளக்கந்தருக.

3. இரட்டைக்கிளவி – குறித்துத் தொல்காப்பியம் தரும் செய்தியைக் காட்டுக.

4. உயர்திணைப் பெயர்கள் பற்றி விளக்குக.

5. விளி ஏலாப்பெயர்கள் குறித்து எழுதுக.

6. குறிப்பு வினைமுற்று என்பதனை விளக்குக.

7. திசைச்சொல், திரிசொல் – எடுத்துக்காட்டுடன் விளக்கி வரைக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

கீழ்காணும் வினாக்களில் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

8. மரபுவழு குறித்துத் தொல்காப்பியம் தரும் செய்திகளை விளக்கிக் கட்டுரை வரைக.

9. உயர்திணைப் பெயர்கள் விளியேற்றலை விவரித்து எழுதுக.

10. ஆறாம் வேற்றுமை குறித்த தகவல்களைத் திரட்டி எழுதுக.

11. விரவுப் பெயர்கள் பற்றி விரிவான அளவில் விளக்கி வரைக.

12. இடைச்சொல்லின் வகைகளை விரிவான வகையில் எடுத்துரைக்க.

13. உரிச்சொல் குறித்த செய்திகளைச் சான்றுகளுடன் தொகுத்துரைக்க.

14. தொகைநிலைத் தொடர்கள் குறித்துத் தொல்காப்பியர் கூறும் செய்திகளைக் காட்டுக.

———————

| | |
|---|---|
| **PG–105** | **MAT–15** |

M.A. DEGREE EXAMINATION –
DECEMBER 2018

First Year

தமிழ்மொழி வரலாறும் இலக்கிய வரலாறும்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. தமிழின் ஐவகை இலக்கணங்களைச் சுட்டுக.

2. தமிழில் பிறமொழிக் கலப்புக் குறித்து எழுதுக.

3. இறைச்சி – குறிப்பு வரைக.

4. பத்துப்பாட்டில் புறம் சார்ந்த நூல்களைச் சுட்டுக.

5. ஆழ்வார்களின் தமிழ்ப்பணிகள் குறித்து எழுதுக.

6. ஐஞ்சிறு காப்பியங்களைக் கூறுக.

7. தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளைச் சுட்டுக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

8. இடைக்காலத் தமிழ்மொழியின் இயல்புகளை விவரி.

9. ஆற்றுப்படை இலக்கியங்களின் சிறப்புகளை விளக்குக.

10. தமிழில் சமய இலக்கியங்களின் செல்வாக்கை விவரி.

11. சிலப்பதிகாரம் – குடிமக்கள் காப்பியம் என்பதை நிறுவுக.

12. சிற்றிலக்கிய வகைமைகளில் ஏதேனும் இரண்டு குறித்து விளக்குக.

13. தமிழில் புதினங்களின் நோக்கும் போக்கும் குறித்து விவரி.

14. தமிழ் ஆராய்ச்சிப் போக்குகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

———————